கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 22/2020

பிரதிவாதி தரப்பு சாட்சி – 3 இமான்வேல் அம்புரோஸ் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 05.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி குறுக்கு விசாரணை</u>

**1.** நான் பி.உடையாப்பட்டியில் வசிக்கிறேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.706 ஆகும். மேற்படி சர்வே எண் எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் வடிவேல் என்பவர் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வடிவேலிற்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி ராமலிங்கத்திற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி ராமலிங்கம் சொத்தை எப்போது கிரையம் வாங்கினார் என்றால் சுமார் 5 முதல் 6 வருடங்கள் இருக்கும்.

2. வாதி வடிவேலிற்கு நான் தான் தாவா சொத்தை கிரையம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை கிரையம் செய்யும் போது ஆஸ்பெஷ்டாஸ் வீடுடன் காலி மனையாக இருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுப்பதற்கு முன்பே தாவா சொத்தின் மேற்கே உள்ள இடத்தில் பிரதிவாதி ராமலிங்கம் குடியிருந்து வந்தார். தாவா சொத்திற்கும் பிரதிவாதி நிலத்திற்கும் இடையே சந்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி சந்து உள்ள நிலம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் தெரியாது. பூர்வீகமாக நாங்கள் அனுபவம் செய்து வந்த பொதுவான சந்தாகும்.

3. வடிவேலிற்கு நான் எப்போது கிரையம் செய்தேன் என்றால் சுமார் 8 வருடங்கள் இருக்கும். நான் கிரையம் செய்யும் போது அளந்து காட்டினேனா என்றால் இல்லை. ராமலிங்கம் கிரையம் வாங்கும் போது அவரது இடத்தை அளந்தாரா என்றால் அளவீடு செய்து தான் கிரையம் வாங்கினார். ராமலிங்கத்தின் சொத்தின் புல எண்ணும், வடிவேலுக்கு பாத்தியப்பட்ட சொத்தின் புல எண்ணும் வெவ்வேறு என்றால் சரிதான். ராமலிங்கம் சுமார் 5 , 6 வருடங்களுக்கு முன்பு பேக்கரி கட்டினாரா

என்றால் சரிதான். மேற்படி பேக்கரி கட்டிய பின்பு தான் வடிவேலுக்கும் ராமலிங்கத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

4. ராமலிங்கம் தனியாக வடிவேல் மீது வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் அது பற்றி தெரியாது. தாவா வழக்கில் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா நிலத்தை அளந்தார்களா என்றால் அது பற்றி தெரியாது. நான் தாவா சொத்தை சொத்தை கிரையம் செய்த போது எனக்கு பாத்தியப்பட்ட உரிமை முழுமையும் வடிவேலுக்கு கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். 23.06.2017 ம் தேதி ஏற்பட்ட கிரைய பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் வடிவேலுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். ராமலிங்கம் பேக்கரி சதுரமாக கட்டியுள்ளாரா, சாய்வாக கட்டியுள்ளாரா என்றால் நேராக கட்டினார்.

5. பேக்கரி கட்டிய பின்பு தான் ராமலிங்கத்திற்கு நான் கிரையம் செய்து கொடுத்தேன். நான் ராமலிங்கத்திற்கு கிரையம் கொடுத்ததால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ராமலிங்கம் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளார் என்றும், அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**